T. 22283

உ

மகாவித்துவான்

# விசுவநாதபிள்ளை

ஆசிரியர்

ஆ. சி. நாகலிங்கபிள்ளை

சுதுமலை

விலை சதம் 25

*All rights reserved by the Author.*

---

ST. PHILOMENA'S PRESS, JAFFNA.

1949.

## நன்றியுரை.

மகாவித்வான் விசுவநாதபிள்ளையின் சீவிய வரலாற்றை இதுகாலமும் நாம் பார்த்தது இல்லை. இவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்கள் காலத்து பெரும் புலவர். இவரும் ஒரு பெருந் தமிழ் அபிமானி. தமிழிலும் தமிழ் இலக்கியங்களிலும் ஆராய்ச்சிசெய்த ஒரு பெரிய மகான். இவருடைய சீவியசரித்திரவரலாறு இதுகாறும் அச்சில்வராதகுறையை நிவிர்த்திசெய்த ஆசிரியருக்கு எனது நன்றி உரித்தாகுக. பிள்ளையவர்களின் சீவியசரித்திரத்தை எழுதவேண்டிய ஆதாரத்தைக் கொடுத்தவர்களுக்கும் நன்றி கூறுகிறேன். இப்பெரியார் வரலாறும், திருமொழிகளும், தமிழ்பணித்திறனும் இந்நூலில் நன்கு விளங்கும். தமிழுலகம் இதனை நன்ருகப் பயன்படுத்தி முன்னேறுக.

St. John's College, Jaffna,
25-12-49.

K. SUBRAMANIAM B. A., (Lond.)

## மதிப்புரை

மகாவித்வான் விசுவநாதபிள்ளையின் சீவியசரிதையை நான் பார்த்தேன். இவரும் யாழ்ப்பாணத்து தமிழ் அபிமானிகளில் ஒருவர். அமெரிக்க மிஷனரிமார்களுடைய உதவியால் இவர் இளம்பராயத்திலே கலைவாணிப்பட்டம் (B. A.) பெற்றவர். அன்றியும் தமிழ் ஆங்கில அகராதி (Lexicon) கலைஞானம், வானசாஸ்திரம், அட்சரகணிதம், வீசகணிதம் ஆகிய நூல்களின் ஆசிரியர். இவருடைய பெரும் நூல் "சுப்பிரதீபம்" இதை வாசிப்போர் அறிவார்கள். பிள்ளையின் அறிவேற்றத்தையும், பரஸ்பர ஞானத்தையும், அகண்ட அறிவு உடையவர். ஒவ்வொரு தமிழ் அபிமானியும் இந்நூலைப் படிக்கவேண்டும்.

யாழ்ப்பாணம்,
25-12-49.

K. SARAVANAMUTTU.

# விசுவநாதபிள்ளை.

இலங்கை மாதாவின் நுதலணியென விளங்குவது யாழ்ப்பாண நாடேயாகும். அங்கு சுத்த நீரோடைகளும், மா, பலா, தெங்கு, வாழை, கமுகு, பனை முதலாந் தாவரங்களுஞ்சிறப்புற்றோங்கும் கண் கவர் வனப்புக்கள் மிக்கு மிக்குள்ளன. நிலத்தின் தன்மைக்கும் நீரின் தன்மைக்குமேற்கவே சான்றோர்கள் பலரைத் தம்மிடத்து வைத்து தனிப்பெருமை விளங்குவதும் அவ்விடத்தின் இயற்கை அழகெனலாம். அங்கு தமிழ்ப் பழங்குடிகள் எங்கும் நிறைந்து வாழ்கின்றனர். கல்விச் செல்வமே தங்கள் வாழ்க்கையை இன்ப மடையச்செய்யும் என்னும் உயரிய நோக்கம் அந்நிலத்து மக்கள் தேடிக்கண்ட திரவியமாகும்.

சிறப்பும், செல்வமும், சீர்மையும் உடைய அந்நாட்டின் நடுப் பகுதியில் சுதுமலை என்னும் ஓர் உயரிய கிராமம் உளது. அந்தக் கிராமத்திலுள்ள சைவவேளாண் மக்களுள், வைரவநாதபிள்ளை என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அக்காலம் மிக்க மேன்மை பெற்ற ஆயுள்வேத பண்டிதராகி விளங்கிய அவருக்குப் பொதுநல உழைப்பும் புறங்கொடுக்காது இருந்தது, தன் சுகங்கருதாத வாழ்க்கையுடைய பண்டிதர் அவர்கள் பல நூல்களைப் பனந்தாள்களில் எழுதிப் பரப்புவாராயினர். அவரது நல்வினைப்பயனாகவே விசுவநாதபிள்ளை அவர்கள் மகனாக உதித்தனரென்பது பெரியோர் துணிபு. இவர் அருட்புலவராகிய ஆறுமுகநாவலர் அவர்கட்கு இரண்டு ஆண்டு மூப்புடையவர். பெரும் புலவராகிய ராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கட்கு பன்னிரண்டு ஆண்டுகட்கு மூத்தவர். கிறிஸ்தவருடம் 1820-ம் ஆண்டு விக்கிரமவருடம் கார்த்திகைத் திங்கள் திருவாதிரைநாளில் தந்தையாரது செல்வமனையில் உதித்தனர். யாழ்ப்பாணநங்கை பெற்ற சிறந்த விவேகிகள் சிலருள் பிள்ளை அவர்களும் ஒருவராவர். இவரது இளமைப்பருவத்தில் கிராமங்கள்தோறும் திண்ணைப் பள்ளிக்கூடங்களே நிலை பெற்று விளங்கியது. தமது உறவினர்களுள் தலைமைபெற்றுவிளங்கிய வைரவநாத உபாத்தியாயரால் மங்களவேளையில் வித்தியாரம்பம் செய்விக்கப்பட்டார். தமது ஊரிலுள்ள வடமொழிப்புலமை நிரம்பிய கங்கபட்டர் என்னும் அந்தணரிடத்து வடமொழியும் கற்றார். பன்னிரண்டுவயசு வரையில் தமிழிலும், சமஸ்கிருதத்திலும் திறமை பெற்று விளங்கினர். அந்தக்காலமே அமெரிக்க மிஷனெரிமார்கள் எமது தேசத்தில் பாடசாலைகட்டி சுதேச மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கும் தருணமாகும்.

மிஷனெரிமார்கள் கட்டுவித்த பள்ளிக்கூடங்களுள் தலைமை பெற்று விளங்கியது வட்டுக்கோட்டை செமினரியாகும். மிசன் பாதிரிமார்கள் தங்கள் தேசத்துள்ள பல சிறந்த செல்வர்களின் பொருள் உதவிகொண்டு முதலில் பாடசாலைகளை நடாத்தினர்கள். அமெரிக்காதேசத்தில் இருந்து தினந்தோறும் காசு திரட்டிக்கொடுத்த அவர்களின் பேர்களையே பள்ளிக்கூடத்திற்சேர்ந்த மணுக்கர்களுக்கும் வைத்து அவர்கள் அப்பெயர்களையும் விளங்கச்செய்தார்கள். விசுவநாதபிள்ளையும் முதலாண்டிலேயே செமினரி பாடசாலையில் மாணவராகச் சேர்க்கப்பட்டார். கி. பி. 1832-ம் ஆண்டே இவ் வைபவம் நிகழ்ந்த காலமாகும். பிள்ளையவர்கள் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் போதிய திறமைபெற்றவர். ஆதலின் ஆங்கிலங்கற்றல் அருமையாகத் தோற்றவில்லை. பாடசாலையில் தாய்மொழியாகிய தமிழும் வெகு கவனமாகக் கற்பிக்கப்பட்டது.

பிள்ளை அவர்கள் பாடக்கிரமத்தில் அதிக சாமர்த்தியமுடையவர். வலம்புரிச்சங்கின் உள்ளிருக்கும் குலம்புரி முத்துப்போன்ற உயர்குடியிற் பிறந்தவர்களுக்கு உயர்ந்த அறிவு தானுகவும் வருவது இயற்கைதானே. தமிழ்மொழியை வளர்த்து பெரியதொண்டுகள் செய்வதற்காகவே ஆங்கிலத்தில் மிக்க ஆர்வங்கொண்டு படித்தனர். சமஸ்கிருதமொழியிலும் ஆங்கிலமொழியிலும் உள்ள பெருங்கலைகள் அத்தனையும் தமிழில் அமைக்கவேண்டுமென்பதே புலவர் அவர்களின் நோக்கமாகும். புலவரவர்களின் மனக்கருத்தைச் செய்துமுடிப்பதற்கு செமினரியில் அமைந்த பாடசாலை ஒரு திரு ஏணிபோல் உதவியது. "பிறநாட்டு நல்லறிஞர் மொழியனைத்தும் தமிழ்மொழியிற் பெயர்க்கவேண்டும்" என்னும் உயர்ந்த நோக்கமானது பிள்ளை அவர்களின் இளமைப் பருவத்திற் குடிகொண்டிருந்தது. அந்த மனக்கருத்தை புலவர் அவர்கள் எழுதி வெளியிட்ட வீசகணித நூன்முகத்திற் காணலாம். அவற்றுள் ஒருபகுதியைத் தருகின்றேம்.

"தமிழில் முன்னேராற் செய்யப்பட்ட வீசகணிதநூலை யாம் யாண்டுங்கண்டதில்லை. தமிழ்ப்பாஷையின் இப்பெருங்குறை ஒருவாறு நிறைதற்கும் தமிழ் மாணுக்கர் கணித அறிவில் வளர்தற்கும் உபயோகமாகவே ஆசிரியர் இங்கிலீசில் சவிஸ்தாரமாக இயற்றிய நூல்களையும் பாஸ்கராசாரியார் முதலியோர் ஆரியத்திற்செய்த (சித்தாந்தசிரோமணி வீசகணிதம் லீலாவதி பிரமஸ்புடசித்தாந்தம் முதலிய) கணிதநூல்களையும் ஆதாரமாகக்கொண்டு இச்சங்கிரகத்தைச் செய்தேம்.

பூர்வீகராச்சியங்கள் புயபலபராக்கிரமம் வீரத்தாற்றோன்றியவரோடு நின்றழிந்ததுபோலச் சில விவேக சிரோமணிகளாற்றோன்றிய நூல்களும் அவர்காலத்தில் அவர் மாணாக்கரிடத்தே பிரவிருத்திப்பட்டுப் பின்பு ஒழிந்தன. இங்கிலீசாரின் இராச்சியமும் அவர்களின் நாணாவித சாஸ்திரங்களும் சனசமுதாய சாமாத்தியத்தானின்று பிரகாசிக்கிறபடியால் ஆயிரக்காலால விருட்சம்போல நெடுநாணிலை நிற்றல்கூடும். அவரைப்போலாதல் தமிழராகிய எமக்கும் தகுதியாமெனக் கருதிச் சாதாரண சனங்களுக்குப் புலப்படவாக்கிய ரூபமாக இந்நூலைச் சமைத்தேம்".

படிக்கும் மாணாக்கர்கள் மனமகிழ்ச்சியடைவதற்காக மேற்குறித்த வீசகணிதத்தின் நின்றும் சில கணக்குகளை இதன்கீழ்க் குறிப்பிற் தருகின்றேம்.

1. வினா: ஒரு இராசாவிடத்திற் செட்டியொருவன் மாணிக்கங் கொண்டுவந்தான். அதனை விலைமதிக்கும்படி இராசா தனது நாலு மந்திரிகளுக்குங் கற்பித்தான். முதல் மந்திரி தனது சம்பளத்திற் பாதியும், மற்ற மூன்றுபேர் சம்பளமும் பெறுமென்றான். இரண்டாம் மந்திரி தன் சம்பளத்தில் மூன்றிலொன்றும் மற்ற மூன்றுபேர் சம்பளமும் பெறுமெனறான். நாலுபேர் மதித்த விலையுஞ்சரியென்றால் மாணிக்கத்தின் விலையென்ன? மந்திரிகள்சம்பளமென்ன?

10. வினா:- விக்கிரமாதித்தராசன் தனது சபையிலிருந்த புலவர்களுக்குச் சில திரவியங்களைச் சரிவரப்பங்கிட்டுக் கொடுத்தான். அப்பொழுது புலவர்களில் மூவரில்லையானால் மற்றவர்களில் ஒவ்வொருவரும் 500 வராகனை அதிகப்படப்பெறுவார்கள். புலவர்களோடே 6 பேரைக் கூட்டினால் ஒவ்வொருவரும் 120 வராகன் குறையப்பெறுவார்கள். சபையிற் புலவரெத்தனை? அவர்களுக்குக்கொடுத்த வராகன் எத்தனை?

17. வினா: ஒரு கணக்கனைப் பிராமணனொருவன் கண்டு கணக்கனே உனக்கொரு அதிசயஞ்சொல்லுகிறேன் கேள். நான் சில பூக்களை எடுத்து ஒருகுளத்திற் போட்டேன். அவை இரட்டித்தன. இரட்டித்த பூவில் எனது நியமப்படி எடுத்துக் கோவிலுக்குச்சாத்தி மூன்றாங்குளத்தில் போட்டேன். இப்படியே ஐந்து குளத்திற்போட்டு இரட்டித்தபூவிற் சரிசரியாக எடுத்து ஐந்துகோவிலுக்குச்சாத்தி அருச்சித்தேன் மிச்சமில்லை. நான் முதலெடுத்த பூ எத்தனை? சொல்வாயாக என்றான். இதற்கு விடையென்ன?

20. வினா: ஒரு இராசகுமாரத்தி அணிந்திருந்த 360 வராகன் விலைபெற்ற முத்துமாலை களவுபோய்விட்டதைக்கண்டு அரண்மனைக்

காவலாளர் அனைவரும் முத்துமாலையின் விலையை இறுக்கும்படி இராசா கற்பித்தான். ஆனால் காவலாளரில் நால்வர் களவுபோன தினத்தில் அங்கில்லாததினால் மற்றவர்கள் முழுவதையும் இறுக்க வேண்டி வந்தது. அப்பொழுது அவர்கள் நாற்பது நாற்பது வராகன் முன்னையதிலும் அதிகமாக இறுத்தார்கள். அப்படியானால் அரண்மனைக் காவலாளர் தொகை எத்தனை?

25. வினா: ஒரு பிராமணன் வழியில் ஒருவனைநோக்கி நீ என்ன சமயி என்று கேட்க ஓ! பிராமணோத்தமரே, எனது சமய முதலட்சரத்தோடு 2 ஐக் கூட்டி இரட்டித்து கஐக் கூட்டி ஐம் மடங்காக்கியபின் இரண்டாம் அட்சரத்தைக் கூட்டிப் பதின் மடங்காக்கி மூன்றாம் அட்சரத்தையும் கூட்டினால் கக0க தொகையாம் இதனால் என் சமயத்தை அறிந்துகொள்ளும் என்றான் வழிப்போக்கன். என்ன சமயி?

வீசகணிதத்தை எழுதி வெளியிட்டமையிலிருந்து அவர்களது கணிதநூல் ஆராய்ச்சி நன்கு விளங்கும் அதுவன்றி விஞ்ஞானநூல், வானநூல் நிலநூல்களிலும் நிரம்பிய அறிவு பெற்றிருந்தார். நிலநூல், வல்ல பெருமையினால் தமது ஊரில் உள்ள கமக்காரர்களுக்கு பயிர் விளைவுக்கேற்ற நிலங்களை ஆராய்ச்சி செய்து காட்டிக்கொடுத்தார். வானசாஸ்திர அறிவு மிகுதியினால் தமிழ்ப் பஞ்சாங்கமொன்றெழுதி யாழ்ப்பாணத்தில் வெளியிட்டார். அமெரிக்க மிசனெரிமாரின் கேள்விப்படியே இப்பஞ்சாங்க வெளியீடு எழுந்ததாகும். பஞ்சாங்கவெளியீட்டில் நின்று புலவர் அவர்களின் தமிழ்மொழிப்பற்றை நன்கு காண்கின்றோம். என்னே அதிசயம்! தம்மை மனமாரக் கேட்ட பாதிரிமார்கள் சோதிட முறைகளைத் தமிழ்ப் பாஷையிலேயே வாசிக்கச் செய்தனர். தம் நாட்டு மக்கள் எல்லாக் காரியங்களையும் தாய்மொழியில் வாசித்துணரவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கம் அவரது மனதிற் குடிகொண்டிருந்தது. அதற்கு உதாரணமாக ஒரு நல்ல கதையொன்றைச் சிறுகத் தருகின்றோம்.

வங்கநாட்டுக் கவிச்சிங்கமாகிய ரவீந்திரநாத்தாகூர் அவர்களை அறியாத அறிவாளிகள் இல்லையென்பேம். அந்தப் பேரறிவாளனும் தமது தேசப்பாஷையைப் பெற்ற தாயைப்போலப் பேணி வளர்க்கின்றார். தமது மனமாகிய குன்றத்திலிருந்து எழுந்து ஓடும் கவிகளாகிய அருவியை முதலில் தாய்மொழியிலேயே எழுதுவர். பின் ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில், பெயர்த்து உதவுவர். பெருமையுடைய பாட்டுகளைத் தாய்மொழியில் எழுதி

வெளியிடும் மகிமையினாலேயே அவர் புகழ் எங்கும் பரவுகின்றது. நம் புலவசிகாமணியின் மனக் கருத்தும் அவ்வாறாகும்.

வட்டுக்கோட்டையிலுள்ள செமினாரியில் இருந்து ஆங்கிலங் கற்ற பெரியாருக்கு சர்வசாஸ்திர சாலையார் நியமித்த உயர்ந்த பரீட்சையொன்றில் சித்தியும் கிடைத்தது. அதனால் பிள்ளை அவர்களின் பெற்றோர் நம் இழந்துபோன ஒரு செல்வத்தைத் திரும்பப் பெற்ற சந்தோஷமடைந்தார்கள். பாதிரிமார்கள் கையில் அகப்பட்ட பிள்ளைகள் அந்தியக் கிரியைக்கும் உதவமாட்டார்கள் என்னுங் கொள்கை அவர்கள் மனதிற் குடிகொண்டிருந்தது. அந்தத் தருணமே சர்வகலாசாலைச் சோதனையிற் சித்தியடைந்த பெருமையைக் கேட்டார்கள். பாதிரிமாரையும் வாழ்த்தினர். பிள்ளையின் ஆங்கில அறிவையும் போற்றினர். "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட்பேறல்லபிற" என்னும் வேதமொழிக்கு இலக்கியமாகிய பிள்ளையின் பெருமையை நினைந்து நினைந்து குதூகலம் எய்தினர். மக்களின் மகிமையினால் மனமுருகாத பெற்றோரும் உளரோ. அருந்தவச் செல்வராகிய பிள்ளை அவர்கள் அந்தச் சமயம் தாம் படித்த சர்வசாஸ்திர சாலையில் ஒரு உபாத்தியாயராக அமர்த்தப்பட்டார். அந்தவேளையிற் பயிற்சி பெற்ற மாணவர்களுள் ராவ் பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளையும் ஒருவராவர். ஆசிரியராகிய விசுவநாதபிள்ளை அவர்கள் ஒரு புதினத்தாளும் எழுதிவெளியிட்டார். அதுவே அமெரிக்க மிசனெரிமாரின் சமயசம்பந்தமாகிய "உதயதாரகை" யாகும். ஒரு வருடகாலமாகப் பாடசாலை ஆசிரியராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் கடமைசெய்தனர். அந்தக்காலம் சர்வகலாசாலையும் சென்னபட்டணத்துக்கு மாற்றப்பட்டது.

## சென்னபட்டணப் பிரயாணம்

தமிழ்மொழியில் ஆர்வமுடைய எவரும் தாய்நாடு செல்வதும் நெடுங்கால வழக்கமன்றோ? புலவர் அவர்களும் சென்னபட்டணம் போய்ச் சேர்ந்தார். அங்கு உயர்தர உத்தியோகம் அரசினரால் உதவப்பட்டது. சில ஆண்டுகள் கழிந்தன. ௧அ௫எ-ம் ஆண்டில் சென்னைச் சர்வகலாசங்கத்தார் ஓர் சோதனை நியமித்தனர். அதுவே உயர்மொழிப்புலமை நிரம்பிய பி. ஏ. பட்டப் பரீட்சையாகும். அதிற் சித்தியடைந்தவர்களுள் யாழ்ப்பாணத்துத் தமிழ்மக்கள் இருவராவர். ஒருவர் குறித்த பிள்ளையவர்கள் மற்றவர் இவர் மாணாக்கராகிய ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை. தாமோதரம்பிள்ளை அவர்களால் தமிழ்மொழியடைந்த உன்னதநிலைமை சாலச் சிறந்தது. தண்டமிழ் வீரராகிய ஆறுமுகநாவலர்

அவர்கள் அச்சேற்றப் பிந்திய உயர்தர நூல்களாகிய கலித்தொகை, வீரசோழியம், தொல்காப்பியத்துட் சில பகுதி சூடாமணி முதலாம் பெருநூல்களை ஏட்டில் நின்றும் பெயர்த்து வேண்டிய திருத்தங்களுடனும், பரிசோதனையுடனும் அச்சேற்றினர். இவராலும் வடவிலங்கையில் உள்ளவர்கள் வெகு உன்னத நிலையை அடைந்தனர்.

இது நிற்க, புலவர் பெருந்தகையாகிய விசுவநாத பிள்ளை அவர்கள் உத்தியோகத்தில் நின்றும் உயர்த்தப்பட்டு சென்னைச் சர்வகலாசங்கத்திலும் அங்கத்தவராக இருந்து அருந்தொண்டு ஆற்றினர். அந்தச் சங்கத்தார்களின் கேள்விப்படி வசனநூல்கள் பலவற்றை இங்கிலீசில் நின்றும் மொழிபெயர்த்துத் தமிழில் எழுதினர். கலாசங்கத்தார்களால் அந்த நூல்கள் அச்சுவாகனமேறிப் பாடசாலைகள் எங்கும் பாடபுத்தகங்களாக நியமிக்கப்பட்டன. அரசாங்க உத்தியோகம் வகித்த பிள்ளை அவர்கள் தமிழ் நூல்கள் செய்வதுடன் சர்வகலாசங்க பரீட்சகராயும் அமர்த்தப்பட்டார். பிள்ளை அவர்களுக்கு ஒருகாலத்தில் மூன்று விதமான உயர்பதவிகளும் அமைந்தமையைக் கண்ட சென்னபட்டண வித்துவான்கள் சிலருக்குப் பொருமை எழுவதாயிற்று. மனித வாழ்க்கையில் அதிக துன்பத்தைத்தேட முயல்பவர்கள் பொருமையென்னும் பாவியுடன் சிநேகங்கொள்வதும் இயற்கைதானே. அந்தத் துண்டுப் புத்தகங்களைக் கண்டித்தும், விளம்பரங்கள் எழுதி வெளியிட்டனர். அத்திச் செயலைக் கண்ட ஆறுமுகநாவலர் அவர்கள் மனம் மிகமிக வருந்தியது. உண்மையைப் பொய்யினால் மறுக்கும் போலிப் புலவர்களை விளித்து ஒரு கண்டனம் வெளியிட்டார். அதில் அறிவுச்சுடராகிய விசுவநாதபிள்ளை அவர்கள் உதித்தது யாழ்ப்பாணத்துக்கு ஒரு பெருமையென்றும் எழுதியுள்ளார். அதன் ஒரு பகுதியைத் தருகின்றேம். "இங்கிலீசில் நின்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு தமிழ் நாடெங்குமுள்ள கவண்மென்ற் பாடசாலைகள் எங்கும் வழங்கும் தமிழ்ப் புத்தகங்களுக்கு ஆசிரியராகிய மகாராச சிறீ விசுவநாதபிள்ளை அவர்களும் யாழ்ப்பாணத்தவரன்றோ? ஓகோ! நீர் இவைகளை நியோகித்த கவண்மென்றாரைக் கண்டிக்கவும் இவர்களாலே பரீட்சிக்கப்பட்டு இவர்கள் கட்டளைக்கு அமைந்து இவர்கள் கீழிருந்து தமிழ் உபாத்தியாயர்களாய்த் தொழில் செய்து சீவனம் செய்யும் இந்நாட்டு (சென்னை)ப் புலவர்களைத் தடுக்கவும் அறிந்திரோ? உமது தேசாபிமானம் எங்கே பறந்தது." என்பதாம்.

ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய கண்டனத்தில் யாழ்ப் பாணத்தவர்களாற் செய்யப்பட்ட சிறந்த நூல்களை வரிசைப் படுத்தியுங் காட்டினர். அவற்றுள் பல்கலைப் புலவராகிய விசுவ நாதபிள்ளை அவர்கள்செய்த வீசகணித நூலையும், ஒன்றுகவைத் துப் பாராட்டியிருக்கிறார்கள். இவ்வளவு அருமையும், பெருமை யும் மதிநுட்பமும் யாழ்ப்பாணத்தவர்களால் என்றும் போற்றப் படத்தக்கது. பிள்ளையவர்களின் விவேகம் வெகு நுட்பமானது. "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருண் மெய்ப் பொருள் காண்பதறிவு'; என்ற உயர்ந்த மொழியை ஒத்துள்ளது. எந்தக்காரியத்தை வாசிப்பினும் அதன் நுட்பத்தை அறிவதில் மிக ஆர்வமுடையவர். இளமைப்பருவமே அருட்புலவராகிய ஆறுமுக நாவலர் அவர்களுடன் பலவாதப்போர்நடத்துங்காலமாகிஇருந்தது.

"கண்ணுக்குச் சுய ஒளி உண்டோ இல்லையோ" என்ற விஷ யம்பற்றி பிள்ளை அவர்களும் ஆறுமுகநாவலர் அவர்களும் பலதர்க் கப்பிரசங்கங்கள் நடத்தினார்கள். அந்தக் குறிப்புகள் 1840-ம் ஆண்டு உதயதாரகையில் வெளிவந்துள்ளன. வட்டுக்கோட்டைக் கல்லூரியில் உள்ள அழகிய வாசிகசாலையில் அவைகளை இன்னும் பண்படுத்திவைக்கக் காண்கின்றோம். கண்ணொளிவாதம் நடத்திய காலம் நாவலர் அவர்கட்கு பதினெட்டுவயசும் பிள்ளையவர்கட்கு இருபதுவயசும் அமைந்திருக்கவேண்டும். இரண்டு புலவர்களும் நடாத்திய வாதப்போரானது வரவரமுதிர்ந்து இறுதியில் மதப்போ ராய் மாறிக்கொண்டது. சமயசம்பந்தமாக நாவலர் அவர்கள் வெ ளியிடும் துண்டுத்தாள்களுக்குப் புலவர் அவர்களும் அவ்வப்போ தே கண்டனங்கள் எழுதுவர். நாவலர் அவர்கள் முப்பதாம்வய சில் வெளியிட்ட "சைவதூஷணபரிகாரம்" என்னும் நூலுக்கு மறுப்பாக சைவதூஷணபரிகாரநிராகரணமாகிய "சுப்பிரதீபம்" என் னும் நூலைப் புலவர் அவர்கள வெளியிட்டார்கள். அந்தச் சிறு நூலானது சமயகண்டனம் எனினும் அதன் அறிவுரைகள் படிப்ப வர்களுக்கு நல்லறிவையூட்டுமென்பதில் ஐயமில்லை. தர்க்கசாஸ்திரம் உணர்ந்தவர்களுக்குப் பெருவிருந்தாகும். அவற்றுள் ஒருவாக்கி யம் தருகின்றோம். "அச்சிற்கும்மிதொடுத்தனர் நச்சுக்கும்மியடித் தனர்" பொருள் அழகும் கெம்பீரமும் அமைய வாக்கியங்களை அமைத்து நூல் எழுதும் வல்லமையைப் பிள்ளை அவர்களிடத்துச் சிறக்கக் காண்கின்றோம்.

நாவலர் அவர்கட்கும் புலவர் அவர்கட்கும் சமைய உண்மை யும் மனத்தூய்மையும் மிகவும் ஒத்துநடந்தது. அழுக்காறு சிறி தும் இல்லாமலும், தேசதொண்டும் சமையமுன்னேற்றமும்

பொருந்தியிருந்தது. இருவர் அன்பும் நாள்தோறும் வளர்ந்து முறுகி விளைவுகொண்டிருந்தது. ஒருநாள் சிதம்பர ஆலயத்தில் இருந்த நாவலர் அவர்களைப் புலவர் அவர்கள் கண்டார்கள். உடனே இருவருக்குமிடையில் சமைபசம்பந்தமாகிய வாதம் நடைபெற்றது. இருவரிடத்தும் மறைபொருளாகவிருந்த அன்பானது திடீரென்று வெளிப்பட்டு ஒன்றுகூடியது. நாவலர் அவர்களின் நல்லுரையை நன்கு மதித்த புலவர் அவர்கள் எழுந்து கும்பிட்டு "சற்குரு நீரே" என்று துதித்தார். அன்றுதொடக்கம் நாவலர் அவர்கட்குப் புலவர் அவர்கள் வலக்கைபோன்று விளங்கினர். எந்தக்காரியங்களிலும் இருவரும் ஒத்த கருத்துடன் செய்துமுடிப்பது வழக்கமாயிற்று. புலவர் பெருந்தகையும் தமது நாவிற் பொன்னூசியினுற் சுட்டுக்கொண்டார். சமயகண்டனம் செய்த நாவிற்குப் பிராயச்சித்த தண்டனையாக இந்தச்செய்கை நடைபெற்றது. அதன்பின் காலநிபிகை என்னும் ஒரு நூலையும் எழுதினர். அந்தத் துண்டுச் சுவடியானது அச்சேறமுன்பு சங்கானையில் உள்ள தமது மனைவியாரின் வீட்டில் உயிர் துறந்தமையால் கையெழுத்தில் இருந்த அந்தத் திபிகையானது கல்லாதார் கையிலகப்பட்டுத் நிக்கிரையாயிற்று.

பிள்ளையவர்கட்கும் நாவலர் அவர்கட்கும் நடந்த வாதப் போர் மிகவும் பாராட்டத்தக்கது. நாவலரின் கொள்கைகளைப் பிள்ளை அவர்கள் ஆதரிப்பர். புலவர் அவர்களின் கொள்கைகளை நாவலர் ஆதரிப்பார். இவ்வாறே அருட்புலவராகிய ஆறுமுக நாவலர் அவர்கட்கும் அன்புப் புலவராகிய விசுவநாதபிள்ளைக்கும் இடையே நடைபெற்ற வாதப் பிரதிவாதமானது கற்றவர்களுக்கும் சாமானியர்கட்கும் வெகு நன்மையை உண்டாக்கியது. இரண்டு பெரிய புலவர்களும் மதங்களில் ஆராய்ந்து கண்ட உண்மையையே நிலைநாட்டினர். புலவர்களின் பாடசாலைத் தோழராயும் அந்தக் காலம் உதயதாரகைப் பத்திரிகை ஆசிரியராயுமிருந்த சதாசிவம் பிள்ளை (ஆணல்) அவர்கள் இவரது பாண்டித்தியத்தை நன்கு அறிந்தவர். தாம் எழுதிய "பாவலர் சரித்திர தீபகத்தில் இவருடைய மதமாற்றத்தைக் குறித்து நன்குக இரங்கிக் காட்டினர். இது மிக மிக ஆச்சரியமுடையது.

## உண்மை நாட்டல்.

புலவர் பெருந்தகையும் நாவலர் அவர்களும் மனம் ஒருப்பட்டு வாழ்ந்த காலத்தில் நடைபெற்ற ஒரு ரசமான சம்பவம் தருகின்றேம். காலஞ்சென்ற சேர் இராமநாதன் துரையவர்கள் சட்ட

சபையில் இலங்கைப் பிரதிநிதித்துவத்தை அவாவினர். அக்காலம் மிகவும் இளம்பருவமுடையவர். அன்றி யாழ்ப்பாணத்தவர்களுடன் நெருங்கிய பழக்கமும் இல்லாதவர். இவருக்கு மாறாக வேறொரு முதிர்ந்த வயசும் அனுபவமும் உடைய நியாயவாதி ஒருவர் எழுந்தார். யாழ்ப்பாணவாசிகள் பலருக்கும் அறிமுகப்பட்டவர். அந்தக் காலத்திலே யாழ்ப்பாணத்துள்ள பிரபுக்களுள் நாவலர் அவர்களை முதன்மையாகக் கண்டுபிடித்தார். தம்மைச் சட்டசபைக்கு அனுப்பினால் தாம் நாவலர் கட்சிக்கு மாறாக ஏற்பட்ட வழக்கு ஒன்றில் நியாயத்தை விட்டுக்கொடுக்க முடியும் என்று தவாலும் தந்திகளும் அனுப்பினர். அந்த நியாயவாதியின் செய்கைகளை நாவலர் அவர்களால் பொறுக்கமுடியவில்லை. வயசில் இளையவராக இருப்பினும், இராமநாதன் துரையே சட்டசபைக்கு ஏற்புடையவர் என்று நிச்சயித்தார். யாழ்ப்பாணத்தவர்களைத் தூண்டி இராமநாதனையே ஆதரிக்கச் செய்தார். அது காரணமாக இராமநாதனை ஆதரிப்பவர்கள் தொகை அதிகரித்து வந்தது. 1879 ம் ஆண்டு வைகாசிமாசம் 22-ம் திகதி வியாழக்கிழமையில் ஊரவர்களின் முயற்சியினால் ஒரு பொதுக்கூட்டம் யாழ்ப்பாணத்தில் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில் இரு கட்சியினர்களும் வாதிக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்துக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்த நாவலர் அவர்கட்குத் தொய்வுநோய் காணப்பட்டது. நாவலர் அவர்கட்குப் பதிலாக புலவர் திலகமாகிய விசுவநாதபிள்ளை அவர்களே தலைவர் பதவிக்கு ஊரவர்களால் ஏற்படுத்தப்பட்டனர். யாழ்ப்பாணநாட்டின் பொதுநன்மை காரணமாகக் கூடப்படும் கூட்டத்துக்குத் தலைமை வகிப்பது தங்கள் கடமையாகும் என்று வரையப்பட்ட கடிதங் கண்டவுடன் தஞ்சாவூரிலிருந்து தமது துரைத்தனத்தாரிடம் அனுமதிபெற்றுக்கொண்டு குறித்ததினத்தில் மாலை மூன்றுமணியளவில் வந்துசேர்ந்து தலைமைவகித்தார். அந்தத்தருணம் நாவலர் அவர்கள் தொய்வுவருத்தத்தால் தெண்டுத்தலையணையிற் சாய்ந்துகொண்டிருந்தார். மடியில் இரண்டுமூன்று தலையணைகளையடுக்கி முளங்கைகளை ஊன்றிக்கொண்டு கூட்டநடபடிக்கைகளை நோக்கியவண்ணமாயே இருந்தனர். கூட்டம் தொடங்கியவுடன் நியாயவாதிபக்கத்தைச்சேர்ந்த சில அப்புக்காத்துமார்கள் எழுந்து தலைமைவகித்திருந்த புலவர் அவர்களுடன் முறையே வாதம்புரிந்தார்கள். கொழும்பிலிருந்தும் கூட்டத்துக்காகவந்த அப்புக்காத்துமார்கள் வாதம் புரிந்தார்கள். அந்தந்தக்கேள்விகளுக் கெல்லாம் புலவர் பெருந்தகை விட்டுக்கொடுக்காது மறுமொழி கூறினர்.

அந்த நடபடிக்கைகளைக்கண்ட நாவலர் அவர்கள் உக்கிரசிங் கம்போற் சீறியெழுந்தார். தலையணைகள் பக்கத்தில் வீசப்பட்டன. தொய்வுநோயுங் நடுநடுங்கி ஓடிமறைந்தது. பிரசங்க மேடையிற் பாய்ந்து வீரகர்ச்சனையும் செய்தார். அப்பொழுது புலவர் அவர் கட்கு முன்னிலும் பன்மடங்குதைரியம் பிறந்தது. இராமாயணத் திற்கூறும் வாலி என்னும் வீரனுக்கு எதிர்த்தவர்களிற் பாதிவலிமை கூடுவதுபோல முன்னிலும் பலமடங்கு வீரமுண்டாயது. வாதம் புரிந்தவர்கள் தோற்று நாணம் அடையும்வரையும் இருவரும் சிங் கக்குட்டிபோல விளங்கினர். இராமநாதன் துரையே சட்டசபைக் குத்தக்கவர் என்று எல்லோருந் நிர்மானித்தார்கள். மேற்குறித்த கூட்டத்தைப்போல முன்னும்பின்னும் கண்டதில்லையென்று நேரிற் கண்டமுதியோர் ஆச்சரியத்துடன் கூறுகின்றனர்.

மொழிபகுப்புமுறையைக் கையாளவேண்டியவர்கள் நம்புலவர் ளைப் பின்பற்றுதல் மிகநன்றாகும். பிறமொழிகளில் உள்ள காரியங் களை அதனைப்போன்று எழுவாய் பயனிலை அமைய ஒவ்வொருவாக் கியங்களாகப் பெயர்த்தெழுதுபவர் அல்லர். தமக்குவேண்டுங்காரி யங்களைமாத்திரங் கவனித்துக்கொண்டு தமிழ் ஆசிரியர்கள் நூல் எழுதும் அரியவழக்கத்தை வழுவவிடாது எவற்றையும் எழுதி முடிப்பர். நடைமுறை மாறுபடாமலும் இது ஒரு மொழிபகுப்பு நூலென்று பிறர் கருதாவண்ணமும் நூல்களை எழுதிமுடிப்பர். இங் கிலீசுப்பாஷையில் அமைந்த சங்கேத பதங்களுக்கு அவ்வவற்றோடு ஒத்த ஓசையும் சொல்லுறுதியும் அழகும் உள்ள சொற்களைதேடி அமைப்பர். ஏற்ற தமிழ்ச் சொற்கள் இல்லாவிடங்கட்கு பெரும் பாலுந் தமிழ்ச்சொற்களோடு இணங்கிநடக்கும் சமஸ்கிருதச் சொற் களையும் வாக்கியங்களையும் தேடியமைப்பர். புலவரவர்களால் மோ ழிபெயர்க்கப்பட்ட நூல்கள் பொன்னும்மணியும் முத்தும்கூட்டியி ழைத்த ஆபரணங்கள்போலப் பிரகாசிக்கின்றனர். அதற்குச் சாட்சி யாக தஞ்சாவூரில் உத்தியோகம் வகித்தகாலத்து ஓர் ஆங்கில தமிழ் அகராதியும் எழுதிவெளியிட்டுள்ளார். அதிலிருந்து பிள்ளையவர் கள் ஆங்கிலமொழிகளையும் வாக்கியங்களையும் தமிழில் தக்கவனப் புடன் வழங்கச்செய்த திறமையை யாவரும் இனிது காணலாம்.

இப்புலவர் பெருந்தகையின் இறந்ததினக்கொண்டாட்டம் நம் தமிழ்நாட்டில் வழங்கப்படாமையைக் குறித்து யாவரும் வருத்த மடைகின்றனர். அமிழ்தினுமினிய நம் தமிழ்மொழியை இனிது வளம்படுத்திய அண்ணல் பொய்கண்டகன்ற புனிதன் என்று போற்றுவதுடன் ஆர்வமிகுதியினால்

"பண்ணார்ந்த இன்சொற் பசுந்தமிழைப் பார்த்தெடுத்த
கண்ணார்ந்த இன்பக்கனியென்கோ காதலினால்
எண்ணார் எழுத்தை இயற்றமிழை ஈந்தனையே
பண்ணாருஞ் சுதுவைநகர்ப் பாவலனே எங்கொழித்தாய்

என மேலும்மேலும் கூறி இக்கட்டுரையை ஒருவாறு முடிப்பேம்.

புலவர் அவர்களின் மாணாக்கரும் அருந்தமிழ்த் தொண்டனு மாகிய ராவ் பகதூர், சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் இவர் பிரிவைக்குறித்துப் பாடிய ஒரு பாடலையுந் தருகின்றேம்.

"ஆறுமுகநாவலரை யன்றழைத்தார் போதாதோ
வீறுவிஸ்வநாதனையும் வேண்டினார்—நீறுதிகழ்
சைவந்தனையங்குந் தாபிக்கவோ விவர்கள்
கைவந்தவர்களெனக் கண்டு.

## அருமைப் புத்திரன்

தமிழர் சரித்திரம் கண்ட திரு. வி. கனகசபைப்பிள்ளை இவரு டைய மகன். இவரும் மிகவும் இளம்வயதிலே கலைவாணிப் பட் டம் (B. A.) பெற்றவர். இதனால் இவரைப் பட்டதாரிப் பையன் என்றழைப்பர். ஆங்கிலக் கல்வியோடு தமிழ்மொழிக் கல்வியி லும் சிறந்து விளங்கினார். இவரின் தந்தையாரே இவர்க்குத் தமிழ் மொழிக்குரவர். "சுவர் இருந்தாற்றான் சித்திரம் எழுதலாம்" என்ற முதுமொழிக்கிணங்கி கல்விநலத்துடன் உடல்நலத்தையும் பேணி வந்தார். ஒருமுகம்மதிய பயில்வாளிடம் தேகப்பயிற்சி முறைகளைக் கற்றாரென்பர். பரந்த நெற்றி - அகன்ற உருண்ட முகம், குவிந்த கண், கறுத்தமீசை, எடுத்த தோற்றம், உரத்த பெ ருத்த தேகம்.

இவர் பட்டம் பெற்றதும் சென்னை தபால் இலாக்காவில் ஓர் உத்தியோகம் பெற்றனர். பின்பு சட்டப் பயிற்சியில் தேறினார். சிலகாலம் வழக்கறிஞராக மதுரையில் கடைமை பார்த்து வந்தார். மதுரைத் தமிழ்ச் சங்க வருடாந்த மகாநாட்டில் (1905) இவர் தலைமை வகித்தார். இவரும் தந்தையார் போல் தமிழ் அபிமானி களுள் ஒருவராய்த் திலங்கினார். இவர் சைவ சமயத்தவரே.
இவரது காலம்:- 25-5-1855 — 12-2-1906.